

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம், வாரணவாசியில் நேற்று (08.08.2024) நடைபெற்ற "மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் பெறப்பட்ட மனுக்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, பயனாளிகளுக்கு தனிநபர் கடனுதவிகள், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு அட்டைகள் மற்றும் கலைஞரின் கனவு இல்லம் வீடு திட்ட ஆணைகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், இ.ஆ.ப., மற்றும் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் ஆகியோர் வழங்கினார்கள். உடன் வாலாஜாபாத் ஒன்றியக் குழுத்தலைவர் ஆர்.கே.தேவேந்திரன், வாலாஜாபாத் ஒன்றிய குழுத் துணைதலைவர் பி.சேகர் ஆகியோர் உள்ளனர்.

### எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் ஏற்பாடு ! ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. முன்னிலை !

# ஆர்.கே.நகர் மேற்கு பகுதி சார்பில் கலைஞர் நினைவு நாள் - 1000 நபர்களுக்கு உணவு!

### மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, வழங்கினார் !

சென்னை, ஆக 9-

ஆர்.கே.நகர் மேற்கு பகுதி திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆறாவது நினைவு நாளை முன்னிட்டு பகுதி செயலாளர் எஸ். ஜெபதாஸ்பாண்டியன் ஏற்பாட்டில் பகுதி அவை தலைவர் மாஸ். டி.வெங்கடேசன் தலைமையில் ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் முன்னிலையில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தியும் 1000 நபர்களுக்கு மதிய உணவு வழங்கினார்.

இதில் மாவட்டத் துணைச் செயலாளர் எஸ். ஆர். கமலக்கண்ணன், பொதுக்குழு உறுப்பினர் இரா.மதியழகன், பகுதி கழக நிர்வாகிகள் எம். கோவிந்தராஜ், எம். லோகநாதன், டி.திராவிட செல்வி, பி.சீனிவாசன், வட்ட கழக செயலாளரும் மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன், எஸ்.எல்.சுந்தர், கி.தேவன், ஆர்.ஏ.எம்.சசிகுமார், ஜி.ஏழுமலை, எம்.ஆர். பி.ராஜன், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர்.வை. கலைவாணன், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் எஸ்.எம். பரசுராமன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் எம். விமலா, மாவட்ட பிரதிநிதிகள் ஜி.ராஜா, மீஞ்சூர் முகுந்தன், கே. ஜானகிராமன், எஸ். கென்னடி, மாவட்ட துணை அமைப்பாளர்கள் எஸ்.எம்.அப்துல் ரகுமான், எஸ்.பொன்ராஜ், எஸ். பாஸ்கர்,

பி.விஜயா, எஸ்.தமிழரசன், எஸ். சரவணகுமார், என்பீல்டு துரைராஜ், கே.அருண்குமார், வி. கார்த்திக், ஏ.முருகேசன், ஏ.வீரா, ஆர்.சுந்தர்ராஜன், பி.அணில்குமார், எஸ். குணசேகர், எஸ். நரேந்திரகுமார், ஜி.உமா, இ.ரங்கநாதன், ஜி.ராஜேந்திரன், வி. மணிமாறன், டீ .ஜஸ்டின், எம்.நடராஜன், இ. பாலசுந்தரம், பெ. ராம்குமார், டி.தியாகு, ஸ்டீல் ஏ. மோகன், பி.எஸ்.வீரா, பி.யுவராஜ், எம்.மணிகண்டன், ஆர்.பத்மா, எம்,குப்புசாமி, ஜி.லட்சுமணன், எம். பி. கிளேம்மன்ராஜ், ஆர். சீனிவாசன், ஆர்.ராபர்ட், ஜெ.அருணா, க.முருகன், பெ. வெங்கடேசன், எம். பானு, சி.செஞ்சம்மாள், ஜே.சி.பீட்டர், என். கோதண்டராமன், கே.பரசுராமன், நாவலர் முருகன், தீபன்ராஜ், இ.பூபதி, கே. முருகன், கணேஷ், சார்பு மன்ற நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள்: பி.முத்து தலைமையில்

# ஆரணியில் 1000 பேருக்கு உணவு வழங்கல்!

### ஜி.பி.வெங்கடேசன் - டி. கண்ணதாசன் - ரோஸ்பொன்னையன் பங்கேற்பு!

திருவள்ளூர், ஆக. 9 -

முத்தமிழ் அறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு நாளான 7.8.2024 அன்று திருவள்ளூர் மாவட்டம் ஆரணியில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இதில் பேரூர் செயலாளர் பி.முத்து தலைமை தாங்கினார்.

முன்னாள் பேரூர் செயலாளர்கள் ஜி.பி.வெங்கடேசன், டி.கண்ணதாசன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் ரோஸ் பொன்னையன், பேரூர் அவைத் தலைவர் வழக்கறிஞர் ஜி.ரமேஷ், பொருளாளர் ஜி.கரிகாலன், துணைச் செயலாளர்கள் டி.கோபிநாத், ஆர்.கலையரசி, டி.எஸ். குருவப்பா,

என். ரகுமான்கான், டி. ஜெயக்குமார், எல்.உதயகுமார், சி.நீலகண்டன், கே.ஆர்.சீனு, புதுநகர் பாலாஜி, கே.நாகராஜ், ஜெ.மகேந்திரன், மகேத்திரன், சாய்சத்யா, கே.ஐஸ்வர்யா, எஸ்.பிரபுகுமார், கே. இளங்கோவன், எஸ். நாகராஜ், ஏ.ஆறுமுகம், கே.பர்தீன், எம்.எம்.சுல்தான், டி.பாஸ்கர், டி.தமிழ்செல்வன், கே.திருமலை, ஜி.பாஸ்கர், எஸ்.பி.உமாபதி, தினேஷ், சீராஜ்தீன், மங்களம் டி.வெங்கடேசன், செல்வசேகர், எடுக்குவாய் ஜெகன், பேங்க் விஸ்வநாதன், வனம்மா, சரளம்மாள், ராஜம்மா, மதுரம்மா உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6ம் ஆண்டு நினைவு நாளையொட்டி தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பாக அதன் மாநில தலைவர் ரெ.தங்கம் தலைமையில் 500க்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் இணைப்பு சக்கர ஸ்கூட்டியில் பேரணியாகச் சென்று நினைவிடத்தில் மலர்தூவி வணங்கினார்கள். வருகை தந்த அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. உடன் துணைப் பொதுச் செயலாளர்கள் க.இளங்கோவன், ஆசிரியர் க.காந்தி, ஆசிரியர் ஆர்.நெடுஞ்செழியன், சிஐடி நகர் ஆர்.சீனிவாசன், ஒருங்கிணைப்புகுழு செயலாளர் பேராசிரியர் முனைவர் கதிரேசன், வி.தர்மலிங்கம், வண்ணை ஜெ. துரைபாபு, பட்டுக்கோட்டை வீர.சரவணன், மாவட்ட நிர்வாகிகள் கி.பத்மநாபன், பா.சக்திவேல், ஆர்.கோவிந்தராஜ், கறம்பக்குடி வே.ராஜு, ஆர்.ஹரிகிருஷ்ணன், பி.சந்தானம், எம்.சுந்தரதேலன், ஏ.மோகன்ராஜ், ஜோஸ்வா, திண்டுகல் தினேஷ்,மனோகரி, ஜெயபாரதி மற்றும் மாநில, மாவட்ட சங்க நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# ஆவடி தொகுதியில் 7 புதிய மின்மாற்றிகள்!

### ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர், ஆக 8-

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி பல்வேறு இடங்களில் பொது மக்கள் புதிய மின் மாற்றி அமைக்க வேண்டுமென்று முன்னாள் அமைச்சர் ஆவடி சாமு.நாசர் எம் எல்ஏ சந்தித்து கோரிக்கை வைத்தனர்.

இந்நிலையில் மழைக் காலம் என்பதால் பொது மக்களுக்கு சீராக மின்சாரம் வழங்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட மின்துறை அதிகாரியிடம் தொடர்பு கொண்டு மின் மாற்றி உடனடியாக வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர் இந் நிலையில் ஆவடி மாநகராட்சி 16 வது டீச்சர்ஸ் காலனி 21 வது வார்டு டிரைவர் காலனி ரோஜா தெரு, 11வது வார்டு மல்லிகை தெரு, 6 வார்டு அசோக் நகர் , 7வது வார்டு சுப்பிரமணி நகர் 8 வார்டு லலிதாம்மாள் நகர், ஆகிய ஏழு இடங்களில் ரூபாய் 35 லட்சம் மதிப்பில் புதிய மின்மாற்றி அமைக்கப்பட்டு அதன் துவக்க விழா நடைபெற்றது.

இதில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ மக்கள் பயன்பாட்டுக்காக திறந்து வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார் .

இந்நிகழ்ச்சியில் மேயர் ஜி.உதயகுமார் செயற் பொறியாளர், சௌந்தரராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே. ஜெ.ரமேஷ், மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ் மண்டல சேர்மேன்கள் வி. அம்மு, என்.ஜோதிலட்சுமி, பகுதி செயலாளர்கள் பொன்.விஜயன், ஜி.நாராயண பிரசாத், வழக்கறிஞர்பெ.வினோத், மாமன்ற உறுப்பினர்கள் மீனாட்சிஆதிகேசவன், வீரபாண்டியன், பரிமளா சுப்ரமணியம், பைரவி ஜான், ஜெயப்பிரியா சரவணன், துளசிங்கம் சக்திவேல், வி.சிங்காரம், ரவிக்குமார், ரமேஷ், சுரேஷ், வி . ரா ஜே ந் தி ர ன் , டிசொசா, மின்வாரிய அதிகாரிகள் பொதுமக்கள் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள்.

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

# திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றிய செயற்குழு கூட்டம்!

### ஒன்றிய கழக செயலாளர் ந.கோபால் அறிக்கை!

திருப்பெரும்புதூர், ஆக.9

திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ந.கோபால் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் ஒன்றிய இளைஞரணி, மாணவரணி, மகளிரணி அவசர செயற்குழு கூட்டம் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா. மோ.அன்பரசன் அறிவிப்புகிணங்க ஒன்றிய கழக அவைத்தலைவர் ஏ.மோகனன் தலைமையில், ஒன்றிய கழக செயலாளர் ந. கோபால் ஆகிய நான் உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் க.ரவிசந்திரன், ஜெகன்குமார், சுபரஞ்சனி கன்னியப்பன்,ப.பரமசிவம், எஸ்.ஏ.சர்தார்பாட்ஷா, பி.ஆர்.நேரு உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள், ஒன்றிய இளைஞரணி ஜா.மதுரைராஜன், கோ. சீனிவாசன், பி.மனோஜ்குமார், எஸ்.ஆர்.சுதாகர், மாணவர் அணி அமைப்பாளர் சூ.டான்போஸ்கோ உள்ளிட்ட மாணவரணி நிர்வாகிகள், கோ.கல்பனா உள்ளிட்ட மகளிரணி நிர்வாகிகள் முன்னிலையில் இன்று (9.8.2024, வெள்ளிக்கிழமை) காலை 10 மணியளவில் ஒன்றிய கழக அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

அதுபோது மாவட்ட கழக பிரதிநிதி, மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் டி.எஸ்.எம்.ஜெயகரன் அவர்கள்,பொது குழு உறுப்பினர் மா.கணேஷ் பாபு, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ப.ராமமூர்த்தி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஜா.செந்தில் தேவராஜ் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

அது சமயம் இளைஞரணி, மாணவரணி, மகளிரணி உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய அணிகளின் தலைவர்கள் துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,கிளை கழக செயலாளர்கள் உள்ளிட்ட ஊராட்சி இளைஞரணி, மாணவரணி, மகளிரணி நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேணுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 1. தமிழக முதல்வர் கழக தலைவர் தளபதி அவர்கள் 18.08.2024 அன்று வல்லக்கோட்டை வருகை குறித்து.

2. ஊராட்சி உட் கிளை வாரியாக இளைஞரணி, மகளிரணி புதிய உறுப்பினர்கள் சேர்த்தல்,

3. கழக வளர்ச்சி.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### ஆலந்தூர் தெற்கு - 167 வது வார்டில்

# முதலமைச்சரின் மருத்துவ காப்பீடுத் திட்ட முகாம்!

### மண்டல குழு தலைவர் என்.சந்திரன் - துர்கா தேவி நடராஜன் பங்கேற்பு!

காஞ்சிபுரம், ஆக.9-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூர் தெற்கு பகுதி 167 வது வார்டு சார்பாக முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடுத் திட்டம் இன்று 09.08 2024 வெள்ளிக்கிழமை மற்றும் 10.8.2024 சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை 167 வது வார்டு மாமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நங்கநல்லூர் 100 அடி ரோட்டில் மாமன்ற உறுப்பினர் துர்கா தேவி நடராஜன் ஏற்பாட்டில் நடைபெறுகிறது. குறு-சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் - காஞ்சி வடக்கு மாவட்ட செயலாளர் தா.மோ. அன்பரசன் ஆலோசனையில் கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி, கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ். பாரதி, அறிவுறுத்தலின்படி நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் 12வது மண்டலக்குழு தலைவரும் ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர் என்.சந்திரன் அவர்கள் நிகழ்ச்சியை தொடங்கி வைக்கிறார். நிகழ்ச்சியில் 167 வது வார்டு நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. பொதுமக்கள் நேரில் வரும்போது பழைய குடும்ப அட்டை ஸ்மார்ட் கார்டு (புதிய குடும்ப அட்டை) ஆதார் கார்டு ஆகியவற்றின் நகல்களை கொண்டு வரவும் ஆதார் கார்டு ஒரிஜினலும் கொண்டு வரவும்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கடலூர் மாநகர தி.மு.க. சார்பில் நடந்த நிகழ்ச்சிக்கு மாநகர செயலாளர் கே.எஸ். ராஜா தலைமையில், தலைமை பொதுக்குழு உறுப்பினர் கே.பி.ஆர்.பாலமுருகன் துணை செயலாளர்கள் சுந்தரமூர்த்தி, அகஸ்டின் பிரபாகரன், பகுதி செயலாளர்கள் நடராஜ், வெங்கடேஷ் சலீம், இளையராஜா ஆகியோர் முன்னிலை தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி, மேயர் சுந்தரி ராஜா ஆகியோர் தி.மு.க. நிர்வாகிகள் கடலூர் சீமாட்டி சிக்னலில் இருந்து பாரதி சாலை வழியாக கட்சி அலுவலகத்திற்கு ஊர்வலமாக சென்றனர். பின்னர் அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் விக்ரமன் , தலைவர் மாநகர அவைத்தலைவர் பழனிவேல்,மாணவரணி பாலாஜி, வக்கீல் கார்த்திக், பாபு,மண்டல குழு தலைவர்கள் பிரசன்னா, சங்கீதா, சங்கீதா செந்தில்முருகன், கவுன்சிலர்கள் ஆராமுது, தமிழரசன்,பிரகாஷ், சுதா அரங்கநாதன், விஜயலட்சுமி செந்தில், சுபாஷினி ராஜா, செந்தில்குமாரி இளந்திரையன், சசிகலா ஜெயசீலன், ஓ.எல். பெரியசாமி, செல்வமணி ராஜராஜன், லெனின், ரங்கநாதன், வெங்கடேசன், எல்சா,அன்பு உள்பட பலர் கலந்து கொண்டனர்.


